**பால் விலை 34% உயர்வு**

First Published : 23 Nov 2011 12:22:19 AM IST

புது தில்லி, நவ. 22: கடந்த 3 ஆண்டுகளில் பால் விலை 34 சதவீதம் உயர்ந்துள்ளது என்று மத்திய வேளாண் இணையமைச்சர் சரண்தாஸ் மஹந்த் மக்களவையில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

மாட்டுத் தீவனங்களின் விலையேற்றம் காரணமாக பால் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. அதேசமயம் கடந்த 3 ஆண்டுகளில் பால் உற்பத்தி 7 சதவீதம் அதிகரித்துள்ளது.

2008-09-ல் நாட்டின் பால் உற்பத்தி 108.6 மில்லியன் டன்னாக இருந்தது. 2010-11-ல் 116.2 மில்லியன் டன்னாக உற்பத்தி அதிகரித்துள்ளது.

உள்ளூர் தேவையைப் பொருத்து வெளிநாடுகளில் இருந்து பால் உற்பத்தி பொருள்களை இறக்குமதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேசிய பால் மேம்பாட்டு ஆணையம், 50 ஆயிரம் டன் பால் பவுடரையும், 15 ஆயிரம் டன் தயிரையும் இறக்குமதி செய்ய அனுமதி அளித்துள்ளது.

பால் பொருள்கள் ஏற்றுமதி கடந்த பிப்ரவரி 18 முதல் தடை செய்யப்பட்டு உள்ளது என்று இணையமைச்சர் சரண்தாஸ் மஹந்த் மேலும் கூறினார்.

**விவசாயிகள் அரசு மானியத்தில் தீவன பயிர் வளர்க்க விண்ணப்பிக்கலாம்**

First Published : 22 Nov 2011 11:01:06 AM IST

விருதுநகர், நவ. 21: விருதுநகர் மாவட்டத்தில் பால் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தீவனப் பயிர்கள் வளர்ப்பதற்கு விவசாயிகள் அரசு மானியம் பெற விண்ணப்பம் செய்யலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஆட்சியர் மு.பாலாஜி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கால்நடைகளின் பராமரிப்புச் செலவைக் குறைப்பதற்கு பசும் தீவனம் முக்கியப் பங்கு வகிக்கிறது. அதனால், அதிக மகசூல் தரக்கூடிய கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், தானிய வகைகளான சோளம், மக்காச்சோளம், வேலிமசால், முயல்மசால், தட்டைப்பயறு போன்றவற்றை இறவை மற்றும் மானாவாரியிலும் பயிர் செய்ய விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. இதனால் பால் உற்பத்திக்கான செலவு குறைந்து கூடுதல் லாபம் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கால்நடைத் துறை பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதில், அதிக மகசூல் தரும் கம்பு நேப்பியர் ஓட்டுப்புல் ரகம் கோ-3, கோ-4, முயல்மசால், வேலி மசால் ஆகிய தீவனப் பயிர்களுக்கு இறவையில் சாகுபடி செய்வதற்கு 0.25 ஹெக்டேர் பரப்பில் விவசாயம் மேற்கொள்ள ரூ.2,590 மானியமும், மானாவாரியில் மேற்குறிப்பிட்ட பரப்பில் தீவனச் சோளம், மக்காச்சோளம், தட்டைப்பயறு சாகுபடி செய்ய ரூ.1,350-ம் வழங்குகிறது.

இதில் தெளிப்பு நீர்ப் பாசன வசதி ஏற்படுத்துவதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு ரூ. 25 ஆயிரம் முழு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் அளிக்கப்படுகிறது. மின் சக்தியினால் இயங்கும் புல் வெட்டும் கருவிக்கு 75 சதவீதமும், அதிகபட்சமாக ரூ. 11,250 மானியமும், புல் நறுக்கும் கருவிக்கு 75 சதவீதமும் அல்லது அதிகபட்சமாக ரூ.6,375 மானியமும், ஊறுகாய் புல் தயாரிப்பதற்கு ரூ.30 ஆயிரம் முழு மானியமும் அளிக்கப்படுகிறது.

எனவே, மேற்காணும் திட்டங்களில் விவசாயிகள் பயனடையவதற்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள கால்நடை உதவி மருத்துவர் அல்லது வேளாண்மை துறை அலுவலரையும் நேரில் அணுகி விண்ணப்பங்களை அளிக்கலாம் என ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 86.32 அடி**

First Published : 22 Nov 2011 09:49:13 AM IST

ஈரோடு, நவ. 21: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை 86.32 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,028 கன அடி தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 500 கன அடி வீதமும், வாய்க்காலில் விநாடிக்கு 1,600 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 19.27 டிஎம்சி.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2011,00:00 IST

ஆண்டுக்கு எண்பது முட்டையிடும் நாட்டுக்குருகு: நாட்டுக்கோழி இனங்களில் ஐந்து ஆண்டுகளாக ஆராய்ச்சி செய்ததில் பல அரிய தகவல்கள் கிடைத்ததாக தெரிவிக்கிறார் டாக்டர்

சந்திரசேகரன், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை ஊட்டச்சத்துத்துறை, கால்நடை மருத்துவக்கல்லூரி, நாமக்கல்.



தாத்தையங்கார் பேட்டை பகுதியில் "குருகு' என்ற நாட்டுக்கோழி இனம் வளர்க்கப்படுகிறது. இதைக் "குறுவ', "குறுவை', "குருவன்' என்ற பல பெயர்களில் அழைக்கிறார்கள். ஆண்டுக்கு அதிகபட்சம் 80 முட்டைகள் வரை இடும். ஆனால் நாட்டு ரகத்தைச் சேர்ந்த மற்ற கோழிகள் 40 முட்டை வரைதான் இடும். குருகுக் கோழிகளுக்கு தாய்ப்பாசம் அதிகம். எனவே குஞ்சுகளை பொன்போல பாதுகாக்கும். உதாரணமாக ஒருமுறை 10 முட்டைகள் அடைகாக்கிறது என்றால் அதில் 8 குஞ்சுகளை வளர்த்து ஆளாக்கிவிடும். இதனால்தான் அந்தப் பகுதி விவசாயிகள் குருகு இனத்தை விரும்பி வளர்க்கிறார்கள். தாத்தையங்கார் பேட்டையின் அருகே உள்ள பவித்திரம் பகுதியில் நடக்கும் சந்தையில் இந்த இனக்கோழி விற்பனைக்கு கிடைக்கும். இந்தச் சந்தை திங்கட்கிழமைதோறும் நடைபெறுகிறது.

**தேனீக்கள்:** இந்தியாவில் மலைத்தேனீ, இந்தியத்தேனீ, கொம்புத்தேனீ, கொசுத்தேனீ, இத்தாலியத்தேனீ என்று 5 வகைகள் உள்ளன. இதில் இந்தியத்தேனீ, இத்தாலியத்தேனீ, கொசுத்தேனீ மட்டுமே மனிதர்களால் பராமரித்து வளர்க்கப் படக்கூடியவை. தேனீ குடும்பம் ஒன்றிற்கு ஒரு ராணி தேனீயும், நூற்றுக்கணக்கான தேனீ குடும்பம் ஒன்றிற்கு ஆயிரக்கணக்கான வேலைக்காரத் தேனீக்களும் இருக்கும். ராணீத்தேனீதான் கூட்டுத் தலைவி. 3 ஆண்டுகள் வரை வாழும். முட்டையிடுவது மட்டும்தான் இதன் வேலை. இனப்பெருக்கம் செய்வது மட்டும்தான் ஆண் தேனீக்களுக்கு முக்கிய வேலை. இதன் வாழ்நாள் 2 மாதங்கள். வேலைக்காரத் தேனீக்களும் 2 மாதங்கள் மட்டும்தான் வாழும். தேன் சேகரித்து வருதல், கூட்டைப் பராமரித்தல், இளம் தேனீக்களுக்கு உணவு ஊட்டுதல் ஆகிய வேலைகளைச் செய்வது வேலைக்காரத் தேனீக்கள்தான். உணவைச் சேகரிப்பதற்காக சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் வரை செல்லும்.

**வெள்ளாடு வளர்ப்பு:** பண்ணைகளில் "தலைசேரி', "சேலம் கருப்பு' ரக வெள்ளாடுகள் லாபம் கொடுக்கக் கூடியவை. தலைச்சேரி ஆடு கேரள மாநிலத்தில் உள்ள தலைச்சேரி பகுதியை பூர்வீகமாகக் கொண்டது. ஆடுகள் தேவைப்படுவோர் கேரள விவசாயிகளிடம் நேரடியாக வாங்க முடியும். தமிழகத்தில் உள்ள கால்நடைபல்கலைக் கழகப் பண்ணைகள் சிலவற்றிலும் கிடைக்கும். ஆனால் அதற்கு முன்பதிவு செய்ய வேண்டும். சேலம் கருப்பு ரகத்தை தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வளர்க்க முடியும். சேலம் மாவட்டத்தில் மேச்சேரி, கொளத்தூர், மேட்டூர், வெப்பூர் ஆகிய ஊர்களில் இந்த ஆடுகள் விலைக்கு கிடைக்கும். கிலோ 200 ரூபாய் என்ற கணக்கில் எடை வைத்து ஆடுகளின் விலைநிர்ணயிக்கப் படுகிறது.

அதாவது 30 கிலோ எடை கொண்ட ஓர் ஆடு ஆயிரம் ரூபாய் விலைக்கு கிடைக்கும். 20 ஆடுகள் கொண்ட பண்ணையைத் தொடங்க 1,50,000 ரூபாய் வரை முதலீடு தேவைப்படும். முறையாக வளர்த்தால் இந்த முதலீட்டை 3 ஆண்டுகளில் எடுத்துவிடலாம். ஆட்டுத்தீவனத்தை விலைக்கு வாங்கினால் கட்டுப்படி ஆகாது. எனவே சூபா புல், கிளைரிசிடியா, அகத்தி, கல்யாண முருங்கை, வேம்பு என குறைந்தபட்சம் 5 தீவன மரங்கள் இருக்க வேண்டும்.

விதம் விதமான இலை, தழைகளைத் தின்றால்தான் ஆடுகளுக்கு வயிறு நிறையும். இந்த மரங்கள் வளர்வதற்கு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் ஆகும். எனவே பண்ணை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தீவனப் புற்களை வளர்க்க ஆரம்பிக்க வேண்டும். வங்கிக்கடன் கேட்டுச் சென்றால் ஆட்டுப்பண்ணை தொடங்குவதற்கான திட்ட அறிக்கை கேட்பார்கள். எனவே அருகிலுள்ள கால்நடை ஆராய்ச்சி நிலையத்தை அணுகினால் திட்ட அறிக்கையைப் பெறமுடியும்.

கால்நடை ஆராய்ச்சி நிலையங்களில் நடத்தப்படும் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சியில் கலந்துகொண்டால் அங்கே கிடைக்கும் தகவல்கள் மற்றும் சான்றிதழ் ஆகியவை கடன்பெறுவதற்கு உதவியாக இருப்பதோடு வெற்றிகரமாக ஆட்டுப்பண்ணை வைப்பதற்கு உதவியாக இருக்கும். (தகவல்: துரைசாமி, பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையம், சேலம்).-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**கொட்டில் முறையில் ஜமுனாபாரி வெள்ளாடு வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2011,00:00 IST



இம்முறையில் ஆடுகளுக்கு சிறந்த முறையில் கொட்டகை அமைத்து மேய்ச்சலுக்கு அனுப்பாமல், கொட்டகை யிலேயே தீவனம் கொடுத்து வளர்ப்பதாகும்.

இந்த முறையில் கொட்டகையில் தரையில் 6 செ.மீ. உயரத்திற்கு ஆழ்கூளம் இட்டு வளர்க்கலாம். ஆழ்கூளமாக கடலைப் பொட்டு, மரத்தூள், நெல், உமி போன்றவைகளை உபயோகப்படுத்தலாம். இரண்டு வாரத்திற்கு ஒருமுறை கூளத்தை வெளியில் எடுத்துவிட்டு பழையபடி மீண்டும் புதிய ஆழ்கூளத்தை நிரப்பவேண்டும். இதனால் சிறுநீர் மற்றும் ஆட்டு சாணத்திலிருந்து வெளியாகும் வாயுக்களான அமோனியா, கார்பன்டை ஆக்சைடு மற்றும் ஹைட்ரஜன் சல்பைடு போன்ற வாயுக்கள் ஆடுகளில் அதிக பாதிப்பை ஏற்படுத்தாது. இம்முறையில் ஒவ்வொரு ஆட்டிற்கும் 20 சதுரடி இடமும், 15 அடி உயரமும் உள்ள கொட்டகை அமைத்தல் நன்று.

**பயன்கள்:** விவசாய நிலமற்றோரும் ஆடு வளர்ப்பை மேற்கொள்ளலாம். சுகாதாரமான பராமரிப்பு முறைகளை கையாண்டால் அதிக எடையுடைய குட்டிகளை பெறமுடியும்.

மேய்ச்சல் கலந்த கொட்டில் முறை: மேய்ச்சல் நிலம் குறைவாக உள்ள இடங்களில் 4-5 மணி நேர மேய்ச்சலுக்கு பிறகு கொட்டகைகளில் அடைத்து பசுந்தீவனம், அடர்தீவனம் மற்றும் உலர்தீவனம் கொடுத்து பராமரிப்பதாகும்.

**பயன்கள்:** இம்முறையில் ஆடுகள் நல்ல உடல் வளர்ச்சி அடைந்து அதிக எடையுடனும்,

ஆரோக்கியத்துடனும் காணப்படுகின்றன. மேய்ச்சல் முறையில் வளரும் ஆட்டின் வளர்ச்சியைவிட 3-4 மடங்கு வளர்ச்சி அதிகமாக இருக்கும். இம்முறையில் வளரும் ஆடுகளில் இருந்து 49 விழுக்காடு இறைச்சி கிடைக்கும்.
தீவிர முறை (உயர் மட்ட தரை முறை): இம்முறையில் தரையிலிருந்து 3 அடி உயரத்தில் சல்லடைத்தரையை மரப்பலகையிலோ அல்லது கம்பிகளிலோ கட்டவேண்டும். இரு பலகைகளுக்கிØடேய உள்ள இடைவெளி 2 செ.மீ. இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அமைப்பதால் ஆடுகளின் சாணம் மற்றும் சிறுநீர் 3 அடி பள்ளத்தில் விழுந்துவிடும். இதன்மூலம் ஆடுகள் நோய் பாதிப்பின்றி சுகாதாரமாக இருக்கவும் வழிவகுக்கும். இம்முறையில் கொட்டகையினை நன்முறையில் பராமரித்தால்
ஆடுகள் சுகாதாரமாகவும், அதிக எடையுடனும் காணப்படும். ஆடு இரண்டு வருடத்திற்கு மூன்று முறை குட்டி போடுகின்றன. 1 தடவை 2 குட்டிகள் போடும். அதன்படி 2 வருடத்திற்கு 6 குட்டிகள், 1 ஆண்டுக்கு 3 குட்டிகள். ஒரு குட்டியின் விலை சராசரி 8000 முதல் 9000 வரை. ஒரு ஆட்டின் ஆண்டு வருவாய் 3 குட்டிகளுக்கு ரூ.27,000. தொடர்புக்கு: எஸ்.பி.குமாரசாமி, மொபைல்: 98652 46868.-கே.சத்தியபிரபா,உடுமலைப்பேட்டை.

**மீன் உணவுகள் தயாரிக்கும் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2011,01:51 IST

பரங்கிப்பேட்டை : பரங்கிப்பேட்டையில் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் மீன் உணவுகள் தயாரித்தல் பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.
பரங்கிப்பேட்டை டாடா சமுதாய கூடத்தில் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய மீன் வளர்ச்சி வாரியம் இணைந்து பரங்கிப்பேட்டையை சுற்றியுள்ள முடசல் ஓடை, பிச்சாவரம், பரங்கிப்பேட்டை, கிள்ளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பெண்களுக்கு மீன் உணவுகள் தயாரிக்கும் பயிற்சி முகாம் ஐந்து நாட்கள் நடத்தியது. பயிற்சி பெற்ற பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. திட்ட அலுவலர் இளங்கோவன் தலைமை தாங்கினார். பயிற்சி பெற்ற பெண்களுக்கு கடலோர காவல்படை இன்ஸ்பெக்டர் சண்முகம் சான்றிதழ் வழங்கினார். கடலோர காவல்படை சப் இன்ஸ்பெக்டர்கள் கனகசபை, வெங்கடேசன் மற்றும் மீனவ கிராம நிர்வாகிகள் பங்கேற்றனர்.

**பால் விலை உயர்வு எதிரொலி டீ, காஃபி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2011,00:58 IST

ஈரோடு: பால் விலை உயர்த்தப்பட்டதால், ஈரோட்டில் டீ, காஃபி விலை ஒன்று முதல் மூன்று ரூபாய் வரை உயர்த்தப்பட்டது.ஆவின் பால் விலை, 18ம் தேதி உயர்த்தப்பட்டது. தமிழகத்தில் சர்க்கரை விலை குவிண்டாலுக்கு, 200 ரூபாய் உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, டீக்கடைகள், பேக்கரி, ஹோட்டல்களில், டீ, காஃபி, ஹார்லிக்ஸ், பூஸ்ட், போன்விட்டா போன்றவை, ஒரு ரூபாய் முதல் மூன்று ரூபாய் வரை விலை உயர்த்தியுள்ளனர்.ஈரோடு மாநகரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட டீக்கடைகள், பேக்கரி மற்றும் ஹோட்டல்கள் உள்ளன. ஒரு மாதத்துக்கு முன் சர்க்கரை கிலோ 28 ரூபாய்க்கு விற்றது, 31 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஆவின் பால் 6.25 ரூபாய் உயர்ந்துள்ளது. பேக்கரி, ஹோட்டல் மற்றும் டீக்கடைகளில் மின் பயன்பாடு அதிகம் உள்ளது. தற்போது, மின்கட்டணமும் உயர்த்தப்பட உள்ளது.விலைவாசி உயர்வு காரணமாக, சாதாரண டீக்கடைகளில் ஐந்து ரூபாய்க்கு விற்ற டீ ஏழு ரூபாயாகவும், ஏழு ரூபாய்க்கு விற்ற காஃபி ஒன்பது ரூபாயாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. பேக்கரிகளில் ஆறு ரூபாய்க்கு விற்ற டீ ஏழு ரூபாயாகவும், எட்டு ரூபாய்க்கு விற்ற காஃபி 10 ரூபாயாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.போன்விட்டா, ஹார்லிக்ஸ், பூஸ்ட் ஆகியவை 10 ரூபாய்க்கு விற்றது; 12 ரூபாயாகவும், பாதாம் பால் 12 ரூபாய்க்கு விற்றது, 15 ரூபாயாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.பெரிய ஹோட்டல்களில் விரைவில் விலை உயர்வு அமலாகும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

**காளான் வளர்ப்பு இலவச பயிற்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 23,2011,04:45 IST

கருத்தை பதிவு செய்ய

மதுரை:மதுரை ரூட்செட் பயிற்சி நிறுவனத்தில், காளான் வளர்ப்பு இலவச பயிற்சி டிச.,11ல் நடத்தப்பட உள்ளது. கனரா வங்கி, சிண்டிகேட் வங்கி மற்றும் ஸ்ரீ தர்மஸ்தலா மஞ்சுநாதேஸ்வரா கல்வி அறக்கட்டளைஇணைந்து வழங்குகின்றன. பயிற்சி பெற விரும்புவோர், டிச., 5க்குள் அணுக வேண்டிய முகவரி: ரூட்செட் பயிற்சி நிலையம், பெருங்குடி, விமானநிலைய சாலை, மதுரை - 22. போன்:73585 56656.

**"கிராமப்புறங்களில் காய்கறி கொள்முதல் மையம் வேண்டும்'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,23:56 IST

கருத்தை பதிவு செய்ய

பொள்ளாச்சி : "சந்தைகளில், காய்கறிகளின் விலை உயர்வை கட்டுபடுத்தும் வகையில் அரசு சார்பில் கிராமப்புறங்களில் கொள்முதல் மையங்கள் துவக்க வேண்டும்' என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொள்ளாச்சி பகுதி விவசாயிகள் கூறியதாவது: தோட்டங்களில் விளையும் காய்கறிகளை வியாபாரிகள் ஏலம் எடுக்கும் போது அதற்கு தகுந்த விலை நிர்ணயிப்பது கிடையாது. சந்தையில், காய்கறி விற்பனை செய்வதை விட இரண்டு முதல் ஐந்து ரூபாய் வரை விலை வைத்து விற்கின்றனர். தோட்டங்களில் கொள்முதல் செய்வது முதல் சந்தைக்கு கொண்டு செல்வது வரையிலான ஏற்று, இறக்கு கூலி, போக்குவரத்து செலவு ஆகியவற்றை பொறுத்து காய்கறிகளின் விற்பனை விலை நிர்ணயம் செய்து விற்கப்படுகிறது. விலைவாசி உயர்வினால், வியாபாரிகள் மட்டுமே லாபம் பெறுகின்றனர். விவசாயிகளுக்கு லாபம் கிடைப்பதில்லை. காய்கறி விலையில் தினமும் ஏற்ற இறக்கம் காணப்படுகிறது. விவசாயம் அதிகளவில் உள்ள தமிழகத்தில், விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் கிடைக்காமல் தவிப்புக்குள்ளாக வேண்டியுள்ளது. விவசாயிகளின் நிலையையும், மக்களின் நிலையையும் கருத்தில் கொண்டு, கிராமப்புறங்களில் காய்கறிகளுக்காக தனி கொள்முதல் மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மையங்கள் அமைத்தால், விவசாயிகளுக்கும் நியாமான விலை கிடைக்கும். விலைவாசி உயர்வையும் கட்டுப்படுத்த முடியும், என்றனர்.

**கறவை மாடுகளுக்கு மானியத்துடன் இன்சூரன்ஸ் : விவசாயிகளுக்கு கால்நடை துறை அழைப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,23:55 IST

அன்னூர் : கறவை மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்ய கால்நடைத்துறை விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது. அன்னூர் வட்டாரத்தில் 22 ஆயிரம் கறவை மாடுகள் உள்ளன. விவசாயிகளுக்கு கறவை மாடு வளர்ப்பு நல்ல உபதொழிலாக உள்ளது. அன்னூரில் உள்ள ஆவின் மற்றும் தனியார் பால் நிறுவனங்கள் 100க்கும் மேற்பட்ட கொள்முதல் மையங்கள் அமைத்து, அதன்மூலம் தினமும் ஒரு லட்சம் லிட்டருக்கு மேல் பால் கொள்முதல் செய்து வருகின்றன. கால்நடை பராமரிப்புத்துறை வெளியிட்ட அறிவிப்பில் கூறியுள்ளதாவது: கறவை மாடு இறந்தால் அதை வளர்ப்போரின் குடும்பம் பொருளாதார ரீதியில் பாதிக்கப்படுகிறது.

இதனால் கறவை மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்வோருக்கு தமிழக அரசு உதவி தொகை வழங்குகிறது.

நிரந்தர ஊனம், மலட்டுத்தன்மை இல்லாத கறவை மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்யப்படுகிறது. 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மாட்டுக்கு ஒரு ஆண்டுக்கான பிரிமியமான 386 ரூபாயில் அரசு 175 ரூபாய் செலுத்தி விடுகிறது. பயனாளி 211 ரூபாய் செலுத்தினால் போதுமானது. 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மாட்டுக்கு, அரசு 262 ரூபாய் செலுத்தும். பயனாளி 317 ரூபாய் செலுத்தினால் போதும். மூன்று ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரே சமயத்திலும் பிரிமீயம் செலுத்தலாம். அதற்கும் அரசு மானியம் உண்டு. கறவை மாடு இறந்தால் உடனே அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். காதிலுள்ள டோக்கனுடன் போட்டோ எடுத்து விண்ணப்பித்தால் உடனே இழப்பீட்டு தொகை வழங்கப்படும். அரசின் இந்த திட்டத்தில் கறவை மாடுகளுக்கு மிக குறைந்த பிரீமியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிலும் மூன்றில் இரண்டு பங்கு தொகை செலுத்தினால் போதும். ஒரு பங்கை அரசே செலுத்தி விடுகிறது. விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கறவை மாடுகளுக்கு இன்சூரன்ஸ் செய்து கொள்ளலாம். விபரங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவ நிலையத்தை அனுகலாம். இவ்வாறு, அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மக்காச்சோள விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,23:56 IST

உடுமலை : மக்காச்சோளம் பயிரிடும் விவசாயிகள் பயிர் மேலாண்மை முறைகளை பின்பற்றினால் அதிக மகசூல் பெறலாம் என வேளாண்துறை தெரிவித்துள்ளது. பெதப்பம்பட்டி வட்டார வேளாண்மை விரிவாக்க மைய அதிகாரிகள் அறிக்கை: குடிமங்கலம் வட்டாரத்தில் பருவமழைக்கு விவசாயிகள் மக்காச்சோளம் பயிரிட்டு வருகின்றனர். பயிர் மேலாண்மை திட்டத்தை பின்பற்றினால் சாகுபடியில் அதிக மகசூல் பெறலாம்.

உர நிர்வாகம்: மண் பரிசோதனைக்கு ஏற்ப தழை, மணி, சாம்பல் சத்துகளை இடுதல் வேண்டும். ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 31 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 33 கிலோ பொட்டாஷ் இட வேண்டும். 25ம் நாள் முதல் மேலுரமாக 59 கிலோ யூரியா மற்றும் 45 வது நாள் இரண்டாவது மேலுரமாக 29 கிலோ யூரியா இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 கிலோ சிறு தானிய நுண்ணூட்டத்தை 15 கிலோ மணலுடன் கலந்து விதைப்பிற்கு முன் நிலத்தில் மேலாகவும், சீராகவும் இட வேண்டும்.

களை நிர்வாகம்: விதைத்த பின் 3 நாட்கள் கழித்து அட்ரசின் களைக்கொல்லியை ஒரு ஏக்கருக்கு 200 கிராம் என்ற அளவில் மண்ணில் போதுமான அளவில் ஈரப்பதம் இருக்கும் போது தெளிக்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு: குருத்து ஈ அல்லது தண்டு ஈ தாக்குதலை கட்டுப்படுத்த 500 மில்லி எண்டோசல்பான் அல்லது 500 மில்லி மீதைல் டெமட்டர்ன் 500 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு எக்டருக்கு தெளிக்க வேண்டும். தண்டு துளைப்பானை கட்டுப்படுத்த 20 கிலோ கார்பரில் 4 சதவீத குருணை மருந்தை 20 நாள் வயதுடைய பயிர்களின் குருத்தில் இட வேண்டும். குருணை பூச்சிக்கொல்லியை பயன்படுத்தாவிட்டால் ஒரு லிட்டர் குயிலால்பாஸ் அல்லது ஒரு கிலோ கார்பரில் 50 சதவீத நனையும் தூள் 20 வது நாளில் தெளிக்கவும். அடிச்சாம்பல் நோயை கட்டுப்படுத்த விதைத்த 20 வது நாளில் எக்டருக்கு மெட்டலாக்சில்(72 சதவித நனையும் தூள்) ஒரு கிலோ அல்லது ஒரு கிலோ மேன்கோசெப் என்ற அளவில் தெளிக்க வேண்டும். சாகுபடி குறித்த சந்தேகங்களுக்கு பெதப்பம்பட்டி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வெங்காயம் சாகுபடிக்குமுதன் முறையாக மானியம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,23:09 IST

கருத்தை பதிவு செய்ய

தேனி:தேசிய தோட்டக்கலை இயக்கத்திட்டத்தில் வெங்காயம் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, நடப்பு ஆண்டு முதல், ஒரு எக்டேருக்கு 12,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. விதை, இடுபொருள், பூச்சி மருந்து செலவுகளுக்காக இந்த மானியம் வழங்கப்படும்.வெங்காயம் சாகுபடி செய்யும் விவசாயிகள் தோட்டக்கலை உதவி அலுவலர்கள், தோட்டக்கலை துணை இயக்குனர்களிடம் விண்ணப்பித்து, மானிய உதவிகளை பெறலாம் என தோட்டக் கலைத்துறை தெரிவித்துள்ளது.

**மானிய விலை நாற்றுகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,21:33 IST

தேனி:பெரியகுளம் தோட்டக்கலை பண்ணையில் மானிய விலையில் நாற்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.பெரியகுளம் தோட்டக்கலைப்பண்ணையில் எல்லா வகை நாற்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. சிங்கப்பூர்

இலவம் நாற்றுகளும் விவசாயிகளுக்கு விற்கப்படுகிறது. சிங்கப்பூர் இலவம் மரங்களின் காய்கள் நீளமாக இருப்பதால் அதிகளவு பஞ்சு கிடைக்கும். மரங்கள் அகலம் குறைவுடன் உயரமாக வளர்வதால் அதிக எண்ணிக்கையில் நடவு செய்ய முடியும்.விற்கப்படும் நாற்றுகள் விலை: கொய்யா- 12, எழுமிச்சை- 5, தேக்கு- 5, பெருநெல்லி- 25, சப்போட்டா- 30, மாதுளை- 12.

**தீவனப்பயிர் சாகுபடியை பெருக்கமானியத்தில் கருவிகள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2011,22:27 IST

சிவகங்கை:பால் உற்பத்தியை பெருக்க, தீவனப்பயிர் சாகுபடியை விவசாயிகளிடம் அதிகரிக்க செய்யும் நோக்கில், அரசு மானியம் அறிவித்துள்ளது. சென்னையில் நடந்த கலெக்டர், எஸ்.பி.,க்கள் மாநாட்டில் பேசிய முதல்வர் ஜெ., விவசாயம், பால் உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.பால் உற்பத்தியை பெருக்க, பசுக்களுக்கு தேவையான புல், தீவனப்பயிர் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கில், கால்நடை பராமரிப்பு துறை ஈடுபட்டுள்ளது.

மேலும் மத்திய, மாநில அரசு உதவியுடன் தீவனபயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானியம் வழங்கப்படும் என அறிவித்துள்ளது.மானியம்: அதிக மகசூல் பெறும் தீவன பயிர் சாகுபடிக்கு, இறவையில் 0.25 ஏக்கரில் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல், வேலிமசால், முயல்மசால் சாகுபடிக்கு 2,590; தீவன சோளம், மக்காச்சோளம், தட்டபயறு சாகுபடிக்கு, 1,350 ரூபாய் மானியம் தரப்படும். பல்லாண்டு தீவன பயிருக்கு தெளிப்பான் பாசன கருவிகள் வாங்க, சிறு, குறு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 25,000 ரூபாய் வரை மான்யம் தரப்படும்.

இதர விவசாயிகளுக்கு ஏக்கருக்கு அதிகபட்சம் 18,750 ரூபாய் மானியம் தரப்படும். தீவன உபயோக மேலாண்மைக்கு தேவையான புல்வெட்டும் கருவி வாங்க 12,500 ரூபாய் மானியம் தரப்படும். புல்நறுக்கும் கருவிக்கு கையால் நறுக்கும் கருவிக்கு அதிகபட்சம் 6,375 ரூபாயும்; மின்சாரம் மூலம் இயக்கும் கருவிக்கு அதிக பட்சம் 11,250 ரூபாய் வரை வழங்கப்படும்.ஊறுகாய் புல் தயாரிக்க தேவையான குழிவெட்டுதல், நிரப்புதல், உரம், உப்பு வெல்ல கரைசல் போட 15,000 ரூபாய் மானியம் தரப்படும். இது தவிர மின்சக்தியில் இயங்கும் புல்நறுக்கும் கருவிக்கு, 15,000 மானியமாக வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

**விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.43,816 வழங்கப்படும் சொட்டு நீர் பாசனத்துக்கு 100 சதவீத மானியம் ஜெயலலிதா அறிவிப்பு**

சென்னை, நவ.23–

நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி, உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன முறை அமைக்க விவசாயிகளுக்கு கூடுதல் மானியம் வழங்கப்படும் என்று முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். சொட்டு நீர் பாசனத்துக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

அரசின் குறிக்கோள்

கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்தில் வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் விவசாயிகளின் வருவாயை மூன்று மடங்கு அதிகரிக்கச் செய்யவேண்டும் என்பது முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையிலான அரசின் குறிக்கோள் ஆகும். இந்த குறிக்கோளை அடைவதற்கு தேவையான பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது.

சாகுபடிக்கு நீர் மிக இன்றியமையாதது. தமிழகத்தின் நிகர பாசனப் பரப்பு 58 சதவீதமாக மட்டுமே உள்ளது. மாநிலத்தில் உள்ள மேற்பரப்பு பாசன ஆதாரத்தில் 95 சதவீதமும், நிலத்தடி நீர் ஆதாரத்தில் 85 சதவீதமும், பயன்படுத்தப்பட்ட நிலையில், நுண்ணீர் பாசனப் பரப்பினை அதிகரிப்பதன் மூலமே நீர் பயன்பாட்டின் திறனை மேம்படுத்த இயலும்.

நீரை திறம்பட நிர்வகிக்க...

பழைய நீர்ப்பாசன முறைகளில் நீர் பயன்பாட்டுத் திறன் மிகவும் குறைவு. நுண்ணீர் பாசன திட்டமான சொட்டு நீர் மற்றும் தெளிப்புநீர் பாசனம் மூலம் பாசன நீரை திறம்பட பயன்படுத்தலாம். இதன் மூலம் பயிரின் உற்பத்தித் திறன் மற்றும் விளைபொருட்களின் தரத்தினை மேம்படுத்த இயலும். பாசனநீர் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்துதல் மற்றும் பயிர் உற்பத்தித் திறனை அதிகரித்தல் போன்ற முக்கிய நோக்கங்களைக் கொண்டு, முதல்–அமைச்சர் ஜெயலலிதா, 1991–ம் ஆண்டு

முதல்–அமைச்சராக இருந்தபோதே, நுண்ணீர் பாசன உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

நீரைச் சேமித்து நீர் பயன்பாட்டினை திறம்பட நிர்வகிக்கவும், நுண்ணீர் பாசன முறைகளை விவசாயிகளிடையே விரிவாக்கம் செய்யவும், அதை பெரும் இயக்கமாக நடத்தவும் முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

நுண்ணுயிர் பாசனத்திற்கு மானியம் அதிகரிப்பு

பண்ணை அளவில் உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க நுண்ணீர் பாசனம் ஒரு முக்கிய தேவை என்பதால் சிறு, குறு விவசாயிகள் இந்த பாசன முறையை அதிக அளவில் பயன்படுத்துவதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மானியத்தினை அதிகரிக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் நுண்ணீர் பாசனம் அமைத்து பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இந்தத் திட்டத்தின்படி சிறு, குறு விவசாயிகள் 60,000 ஏக்கர் நிலப்பரப்பில் நுண்ணீர் பாசன வசதி அமைத்திட 100 சதவீத மானியமும், இதர விவசாயிகள் 15,000 ஏக்கர் நிலப்பரப்பில் நுண்ணீர் பாசன வசதி அமைத்திட 75 சதவீத மானியமும் வழங்கப்படும்.

ஏக்கருக்கு ரூ.43 ஆயிரம் கிடைக்கும்

பயிர் சாகுபடிக்கு போதுமான நீர் வசதியுடன் நீர் இறைக்கும் அமைப்பும் உள்ள விவசாயிகள் இத்திட்டத்தின்கீழ் மானியம் பெற வழிவகை செய்யப்பட்டு உள்ளது. பெண்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர் மற்றும் மாற்றுத்திறனாளி விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலும், இத்திட்டத்தில் பயன்பெற குறு விவசாயிகள் $2\frac{1}{2}$ ஏக்கர் அளவுக்கும், சிறு விவசாயிகள் 5 ஏக்கர் அளவுக்கும் மானியம் பெறலாம். குத்தகை அடிப்படையில் பயிர் செய்யும் விவசாயிகளும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்து நுண்ணீர் பாசன வசதி அமைத்தும் மானியத்தினை பெறலாம். நுண்ணீர் பாசனம் அமைக்க ஏக்கர் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.43,816 ரூபாய் வழங்கப்படும். மேலும், அதிக நீர் வழங்கக்கூடிய தெளிப்பான் அல்லது சிறு தெளிப்பான் அல்லது எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய தெளிப்பு நீர் பாசன அமைப்புகளுக்கும் மானியம் வழங்கப்படும்.

சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன முறையை அமைப்பது எப்படி?

தமிழ்நாடு தோட்டக்கலை மேம்பாட்டு முகமையினால் அங்கீகரிக்கப்பட்ட நுண்ணீர்

பாசன அமைப்பு தயாரிப்பு நிறுவனங்களை விவசாயிகள் தங்கள் விருப்பம்போல் தேர்வு செய்து கொள்ள இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. மேலும், மானியத்தில் பெறும் நுண்ணீர் பாசன அமைப்பு குறைந்தபட்சம் 3 ஆண்டுகள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காக விவசாயி, நிறுவனம் மற்றும் திட்டம் செயல்படுத்தும் முகமைகளுடன் முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்பது இத்திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்.

விவசாயிகள் விண்ணப்பித்த பத்து நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு முகமையால் தகவல் தெரிவிக்கப்பட்டு, பாசன அமைப்பினை நிறுவும் ஆணை சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுவிடும். பின்னர் விவசாயிகள் 7 நாட்களுக்குள் நிலம் தயாரிப்பு பணியினை முடிக்க வேண்டும். அதன் பின்னர் 15 நாட்களுக்குள் நுண்ணீர் பாசன தயாரிப்பு நிறுவனம், நுண்ணீர் பாசன அமைப்பை நிறுவிட வேண்டும். இவ்வாறான கால அவகாசம் நிர்ணயித்துள்ளதால், நுண்ணீர் பாசன அமைப்பு விரைந்து நிறுவிட இயலும்.

குறைகளை தெரிவிக்க சேவை அட்டை

பாசன அமைப்பு நிறுவிய பின் மூன்றாண்டு காலத்திற்குள் பழுது அல்லது குறை ஏதும் ஏற்பட்டால் அதனை சம்பந்தப்பட்ட நிறுவனமே இலவசமாக சரி செய்து தரவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநில நுண்ணீர் பாசன குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு சேவை மையத்தினை நிறுவவேண்டும்.

இந்த பாசன அமைப்பு நிறுவியபின் ஏற்படும் குறைகளை தெரிவிக்க சேவை அட்டை முறை அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் நிறுவனத்தின் பணி கண்காணிக்கப்படும்.

அதிக மகசூல் கிடைக்கும்

நுண்ணீர் பாசன அமைப்பு பராமரித்தல் தொடர்பாக விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மூலம் பயிற்சி வழங்கப்படும். மேலும், இதன் இயக்கம் மற்றும் பராமரித்தல் தொடர்பான விவரங்கள் தமிழில் அச்சிடப்பட்டு ஒரு கையேடு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ள இந்த நுண்ணீர் பாசன மானிய திட்டத்தின் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பெரும் பயன் அடைவார்கள். மேலும், நுண்ணீர் பாசன முறையை பின்பற்றும் நிலங்களின் பரப்பு அதிகரிப்பதன் வாயிலாக அதிக அளவு மகசூல் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது பணவீக்கம் மார்ச் மாதத்துக்குள் குறையும் பாராளுமன்றத்தில் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை**

*புதுடெல்லி, நவ.23–*

*பணவீக்கம், மார்ச் மாதத்துக்குள் 6 அல்லது 7 சதவீதமாக குறையும் என்று பாராளுமன்றத்தில் பிரணாப் முகர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.*

*அறிக்கை தாக்கல்*

*விலைவாசியை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக்கோரி, கடந்த ஆகஸ்டு 4–ந் தேதி பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு பதில் அளிக்கும் வகையில், மத்திய நிதி மந்திரி பிரணாப் முகர்ஜி, நேற்று பாராளுமன்றத்தில் தானாக முன்வந்து அறிக்கை தாக்கல் செய்தார். அதில், பிரணாப் முகர்ஜி கூறி இருப்பதாவது:–*

*கடந்த 3 மாதங்களாக, பழங்கள், காய்கறிகள், முட்டை, இறைச்சி, மீன், பால் ஆகியவற்றின் விலை உயர்வால், உணவுப்பொருள் பணவீக்கம் உயர்ந்துள்ளது. இதுதவிர, எரிபொருள்களின் விலை உயர்வும் முக்கிய காரணம் ஆகும்.*

*காரணம் என்ன?*

*பணவீக்க உயர்வுக்கு சர்வதேச விலை நிலவரம், தேவைக்கு ஏற்ப சப்ளை அதிகரிக்காதது, ரூபாய் மதிப்பு வீழ்ச்சி ஆகியவையே காரணம். எனவே, மாநில அரசுகளும் தங்கள் பங்குக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை தாங்களே சந்தைக்கு எடுத்து வருவதற்கும், அவர்களிடம் மக்களேநேரடியாக பொருட்களை வாங்குவதற்கும் வழிவகுக்க வேண்டும். பணவீக் கத்தை கட்டுப்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டுள்ளது. நிலைமையை ரிசர்வ் வங்கி உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.*

*பணவீக்கம் குறையும்*

*பணவீக்க நிலவரத்தில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. ஆயினும், விரும்பத்தக்க மாற்றத்தை அடைய இன்னும் நிறைய செய்ய வேண்டியுள்ளது. வருகிற மார்ச் மாதத்துக்குள், பணவீக்கம் 6 அல்லது 7 சதவீதமாக குறையும் என்று நம்புகிறேன். சமையல் கியாஸ், மண்எண்ணெய், உரம் ஆகியவற்றுக்கான மானியத்தை சம்பந்தப்பட்ட நுகர்வோருக்கு நேரடியாக வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு உத்தேசித்துள்ளது. இதுபோல், பொது வினியோக திட்டமும் மேம்படுத்தப்படும். இவ்வாறு பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.*